தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### மீன்கள் இனப் பெருக்கத்துக்காக 45 நாள் மீன்பிடி தடைக் காலம் அமல்

**ராமேசுவரம்,**



**ராமேசுவரம் கடலில் மீன் இனப் பெருக்கத்துக்காக 45 நாள் மீன்பிடி தடைக் காலம் அமல்படுத்தப்பட்டதையொட்டி கடலில் பாதுகாப்பாக நிறுத்தப்பட்டுள்ள படகுகள்.**

ராமேசுவரம் உள்பட தமிழக பகுதிகளில் கடலில் மீன்கள் இனப் பெருக்கத்துக்காக மீன்பிடி தடைக் காலம் திங்கள்கிழமை முதல் துவங்கியது. இதனையொட்டி மீனவர்கள் கடலுக்கு செல்லாமல் படகுகளை பாதுகாப்பாக கடலில் நிறுத்தும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

தமிழக கடல் பகுதியில் மீன்கள் இனப் பெருக்கத்துக்காக ஆண்டுதோறும் 45 நாள்கள் மீன்பிடி தடைக் காலம் அமுலில் இருக்கும். அந்த வகையில் இந்த ஆண்டு திங்கள்கிழமை நள்ளிரவு முதல் மீன்பிடித் தடைக்காலம் துவங்கியது. இதனால் ராமேசுவரம், மண்டபம், பாம்பன் பகுதிகளைச் சேர்ந்த மீனவர்கள் கடலுக்குச் செல்லாமல் படகுகளை பாதுகாப்பாக நிறுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த ஆண்டு மீன்பிடி தடைக் காலம் ஏப்ரல் 14 ஆம் தேதி நள்ளிரவு முதல் துவங்கி மே மாதம் 29 ஆம் தேதி முடிவடைகிறது. இந்த நாள்களில் கடலில் இறால் மீன்கள்,

கணவாய் மற்றும் பல வகையான மீன்கள், பாறைகள், பாசிகளில் முட்டையிட்டு இனப்பெருக்கம் செய்யும்.

மீனவர்கள் கடலில் என்ஜின் பொருத்திய விசைப் படகுகளை ஓட்டிச் செல்வதால் கடலில் அதிர்வு ஏற்படும். அப்போது மீன்கள் ஒரே இடத்தில் தங்காது. மேலும் மீன்பிடி வலைகளில் அவை சிக்கி சேதம் அடைந்து விடும். எனவே அரசு இந்த 45 நாள்களுக்கு மட்டும் மீனவர்களுக்கு, மீன்பிடிக்க அனுமதி வழங்குவதில்லை. இந்த தடை காரணமாக மீனவர்கள் படகுகளை பாதுகாப்பாக கடலில் நிறுத்தும் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

மேலும் இந்த 45 நாள்களும் படகுகளில் என்ஜின் பழுது நீக்கும் பணி மற்றும் மீன்பிடி சாதனங்களை பராமரிக்கும் பணிகளில் மீனவர்கள் ஈடுபடுவார்கள். பின்னர் தடைக்காலம் முடிந்ததும் கடலுக்கு செல்ல தயாராகி விடுவார்கள்.

## 6 இடங்களில் வெயில் சதம்: மழை வாய்ப்பு



**சென்னை,**

தமிழகத்தில் கரூர் பரமத்திவேலூர் உள்ளிட்ட ஆறு இடங்களில் திங்கள்கிழமை (ஏப்.14) 100 டிகிரிக்கும் அதிகமாக வெயில் பதிவாகியுள்ளது.

அதிகபட்சமாக கரூர் பரமத்திவேலூரில் 103 டிகிரியும், குறைந்தபட்சமாக கொடைக்கானலில் 54 டிகிரி வெப்பமும் பதிவாகியுள்ளது. மாநிலத்தில் பெரும்பாலான இடங்களில் வெயில் வாட்டி வதைத்தபோதும் வால்பாறையில் 6.4 மி.மீ, கொடைக்கானலில் 1.7 மி.மீ. மழையும் பதிவாகியுள்ளது.

திங்கள்கிழமை பதிவான வெயில் அளவு

(ஃபாரன்ஹீட்டில்):

திருச்சி-102, மதுரை, வேலூர்-101

பாளையங்கோட்டை, சேலம்- 100, தர்மபுரி- 98

கோவை- 97

மழை வாய்ப்பு: தமிழகம் மற்றும் புதுவையில் அடுத்த 24 மணி நேரத்தில் மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்யக்கூடும். மாநிலத்தில் பெரும்பாலும் வறண்ட வானிலையே நிலவும் என வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

சென்னையைப் பொருத்தவரை வானம் ஓரளவு மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்பநிலை அதிகபட்சமாக 93 டிகிரியாகவும் குறைந்தபட்சமாக 82 டிகிரியாகவும் இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## தமிழ் புத்தாண்டு: வெற்றிலை வைத்து விவசாயப் பணிகள் தொடக்கம்

**மேலூர்,**

மதுரை மாவட்டம், வெள்ளலூர், தும்பைப்பட்டி ஆகிய கிராமங்களில் மந்தையில் வெற்றிலை வைத்து வழிபட்டு தமிழ் புத்தாண்டில் விவசாயப் பணிகளை மக்கள் தொடங்கினர்.

வெள்ளலூர் சுற்று வட்டாரத்தைச் சேர்ந்த 50-க்கு மேற்பட்ட கிராம மக்கள் வெள்ளலூர் மந்தைகோவிலில் திரண்டனர். அங்கு கிராமப் பிரமுகர்கள், வேளாண் பணிகளுக்கான தச்சர், கால்நடை வளர்ப்போர் உள்ளிட்டோர் கிராம முறைப்படி அழைக்கப்பட்டு வெற்றிலை கட்டுகள் வைக்கப்பட்டு, பிரித்து வழங்கப்பட்டது. இவ் வெற்றிலைக்கட்டுகளைப் பெற்றுக்கொண்ட கிராமப் பிரமுகர் அதை தங்கள் கிராமத்துக்கு கொண்டுபோய் அனைத்து வீடுகளுக்கும் பிரித்துக் கொடுப்பார். அதை பெற்றுக்கொண்ட விவசாயிகள், வீட்டில் பூஜையறையில் வைத்தும், வயலில் கூடையில் குப்பையை அள்ளிச் சென்று கொட்டி, கலப்பைக் கொழுவால் உழுதும் வழிபடுவர்.

சித்திரை முதல் நாளில் விவசாயக் கருவிகளை வைத்தும் விவசாயிகள் வழிபடுவர்.

தும்பைப்பட்டி:

தும்பைப்பட்டி பள்ளிவாசலையடுத்துள்ள மந்தையில் கிராமப் பிரமுகர்கள் ஜமாத்தார் கூடியிருந்து வெற்றிலைக் கட்டுகள், பாக்கு வைத்து வழிபட்டனர்.

பின்னர் கிராம பிரமுகர்கள் விவசாயப் பணிகளுக்கான தச்சர், கால்நடை வளர்ப்போருக்கும், விவசாயத் தொழிலாளர்களுக்கும் வெற்றிலை பாக்கை முஸ்லிம் பிரமுகர்கள் வழங்கினர்.

பாரம்பரியமான இவ் வைபவம் சித்திரை முதல்நாளில் கடந்த 801 ஆண்டாக நடைபெற்று வருவதாகத் தெரிவித்தனர். மந்தையில் புதிய ஆண்டுக்கான பஞ்சாங்கம் வாசிக்கப்பட்டது.

## தமிழ் புத்தாண்டு: விவசாயிகள் வயலில் உழுது வழிபாடு

**மதுரை,**

சித்திரை முதல் நாளாம் தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு மதுரை மாவட்டத்தில் விவசாயிகள் அந்தந்தப் பகுதி கோயில் நிலங்களில் உழுது திங்கள்கிழமை சிறப்பு வழிபாடு நடத்தினர். அனைத்து கோயில்களிலும் பக்தர்கள் கூட்டம் அலைமோதியது.

தமிழில் 12 மாதங்கள் உள்ளன. இதில் சித்திரை மாதம் முதல் தேதியில்தான் தமிழ் புத்தாண்டு பிறக்கும். அதன்படி, விஜய ஆண்டு நிறைவடைந்து ஜய ஆண்டு பிறந்துள்ளது. சித்திரை முதல் நாளாம் தமிழ்ப் புத்தாண்டை விவசாயிகள் தங்களது விவசாயத்தின் தொடக்கமாகக் கருதி பூஜை செய்வது வழக்கம்.

அதன்படி மதுரை திருப்பரங்குன்றம், பொதும்பு, அலங்காநல்லூர் மற்றும் மேலூர் பகுதி விவசாயிகள் ஏர்பூட்டி தங்களது நிலத்தில் உழுது தமிழ்ப் புத்தாண்டைக் கொண்டாடினர். திருப்பரங்குன்றம் தென்கால் கண்மாய், பானாங்குளம் உள்ளிட்ட 7 கண்மாய் பாசன விவசாயிகள் தார்க்குச்சியில் பூச்சூடி திருப்பரங்குன்றத்தில் மலையை வலம் வந்தனர். பின்னர், குகைக் கோயில் அருகே உள்ள கோயில் நிலத்தில் 4 கலப்பை கொழு உள்ள ஏர்பூட்டி உழுதனர். அதன்பின், விவசாயக் கூலி நிர்ணயம் குறித்து பேசினர். மதுரை ஊரகப் பகுதியில் வீடுகள் முன்பு ஏர்களை சாத்திவைத்து, காட்டுக் கருவேல மரக்குச்சிகளில் செய்த தார்க்குச்சிகளை

அடுக்கிவைத்து பூஜை செய்தனர். பின்னர், ஏர்பூட்டி தங்கள் நிலங்களில் உழுது வழிபட்டனர்.

கோயில்களில் கூட்டம்: தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு மதுரை அருள்மிகு மீனாட்சி சுந்தரேசுவரர் திருக்கோயிலில் அம்மனுக்கு தங்கக் கவசம், வைரக்கிரீடம் சார்த்தப்பட்டிருந்தது. சுவாமிக்கு வைர நெற்றிப்பட்டை சார்த்தப்பட்டிருந்தது.

சுவாமி சன்னதி முன்புள்ள கம்பத்தடி மண்டபம் அருகே கோயில் பஞ்சாங்கத்தை வைத்து வாசித்து சிறப்பு பூஜைகள் நடந்தன. பெருமாள் கோயில்கள், விநாயகர் கோயில்கள், அம்மன் கோயில்களில் தமிழ்ப் புத்தாண்டை முன்னிட்டு கூட்டம் அலைமோதியது.

தெப்பக்குளம் மேலரத வீதியில் உள்ள அருள்மிகு முக்தீஸ்வரர் திருக்கோயிலில் சுவாமிக்கு முன்பாக ருத்ராட்சை மாலைகளால் ஆன பந்தல் போடப்பட்டிருந்தது. தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துகளை பலரும் நண்பர்கள், உறவினர்களுடன் பகிர்ந்து கொண்டனர்.

## கீழ்பவானி பாசனத்துக்குத் தண்ணீர்: விவசாயிகள் நலச் சங்கம் வேண்டுகோள்

**சென்னை,**

காவிரி இறுதித் தீர்ப்பின் படி கீழ்பவானி பாசனத்துக்குத் தண்ணீர் திறந்து விட வேண்டும் என கீழ்பவானி விவசாயிகள் நலச் சங்கம் தேர்தல் ஆணையத்துக்கு வேண்டுகோள் விடுத்துள்ளது.

இது குறித்து அந்த சங்கம் வெளியிட்ட செய்திக்குறிப்பு: கீழ்பவானி பாசனம் நீலகிரி, திருப்பூர், ஈரோடு, கரூர் ஆகிய தொகுதிகளில் உள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளாக கீழ்பவானி பாசனத்தின் 2-ஆவது மண்டலத்துக்கு தண்ணீர் திறக்கப்படவில்லை. இதனால் இந்தப் பகுதியில் கடுமையான வறட்சியும், குடிநீர் தட்டுப்பாடும் ஏற்பட்டுள்ளது. தேர்தல் விதி நடைமுறையில் உள்ளதால் ஆணையத்தின் ஒப்புதல் பெறப்பட்டு, பிப்ரவரி 4-ஆம் தேதி 2 ஆண்டுகளாக தண்ணீர் பாயாத பகுதிக்கு 15 நாள்களுக்கு தண்ணீர் திறந்து விடப்பட்டது. இந்த தண்ணீரை வைத்து விவசாயிகள் எள் பயிரிட்டுள்ளனர். எள்ளுக்கு 4 நனைப்புக்குத் தண்ணீர் விட வேண்டியது அவசியம். ஒவ்வொரு நனைப்புக்கும் 10 நாள்கள் என 3 நனைப்புகளுக்குத் தண்ணீர் திறக்க வேண்டி உள்ளது. இதற்கு 5 டிஎம்சி தண்ணீர்

தேவை. தற்போதைய தேதியில் நீலகிரி நீர் மின் அணைகளில் 10 டிஎம்சி தண்ணீர் இருப்பு உள்ளது. கீழ்பவானி பாசனத்துக்கு தட்டுப்பாடு வரும்போது, 4.6 டிஎம்சி போக மீதியைப் பாசனத்துக்கு முன்னுரிமை கொடுத்து விடலாம் என அரசாணை உள்ளது. கீழ்பவானி அணையில் உள்ள நீரையும், நீர் மின் அணை நீரையும் வைத்து, எள் பயிருக்கு 3 நனைப்புக்குத் தேவையான நீரை தாராளமாக திறந்து விட முடியும். அதனால் எள் பயிரைக் காப்பாற்ற தண்ணீர் திறப்புக்கான ஆணையை தேர்தல் ஆணையம் வழங்க வேண்டும் என அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**ஆட்டுக்கொல்லி நோயிலிருந்து கால்நடைகளைக் காக்க தடுப்பூசி**

**காஞ்சிபுரம்,**

ஆட்டுக்கொல்லி நோயிலிருந்து கால்நடைகளை காக்க தடுப்பூசி போட்டுக் கொள்ள வேண்டும் என்று கால்நடைப் பராமரிப்புத் துறை கேட்டுக் கொண்டுள்ளது. இது குறித்து காஞ்சிபுரம் மாவட்ட கால்நடைப் பராமரிப்புத் துறை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பு:

திருக்கழுகுன்றம் ஊராட்சி ஒன்றியம், கொக்கிலமேடு (விட்டிலாமேடு) கிராமத்தில் உள்ள கால்நடைகள் கடந்த 2012 மே மாதம் ஆட்டுக்கொல்லி நோயினால் பாதிக்கப்பட்டது.

நடப்பாண்டிலும் இத்தகைய நோய் அப்பகுதியில் ஏற்பட வாய்ப்புகள் இருப்பதால் விவசாய பெருமக்கள் அருகிலுள்ள கால்நடை உதவி மருத்துவர் மற்றும் கால்நடை கிளை நிலையங்களை அணுகி தங்களது கால்நடைகளுக்கு ஆட்டுக்கொல்லி நோய் தடுப்பூசி முன்னதாகவே போட்டுக் கொள்ளலாம் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

**ஒட்டன்சத்திரம் சந்தை வெறிச்சோடியது**

**ஒட்டன்சத்திரம்,**

கேரள வியாபாரிகள் வரத்து குறைந்ததால் ஒட்டன்சத்திரம் காய்கறிச் சந்தை வெறிச்சோடியது. திண்டுக்கல் மாவட்டம் ஒட்டன்சத்திரம் காய்கறி சந்தையானது தமிழகத்தின் மிகப்பெரிய காய்கறி சந்தையாகும். இந்த சந்தைக்கு

ஒட்டன்சத்திரத்தை சுற்றியுள்ள பல கிராமங்களில் இருந்து பல்வேறு காய்கறிகள் தினசரி விற்பனைக்கு வருவது வாடிக்கை.இந்த நிலையில் செவ்வாய்க்கிழமை கேரளாவில் புத்தாண்டு விழா கொண்டாடப்படுகிறது. இதனால் கேரள வியாபாரிகள் காய்கறி சந்தைக்கு வராததால் சந்தை வெறிச்சோடி காணப்பட்டது. மேலும் சித்திரை முதல் நாள் என்பதால் தமிழக வியாபாரிகளும் வரவில்லை. இதனால் பல்வேறு காய்கறிகள் தேக்கம் அடைந்தன.

## பவானிசாகர் அணை நீர்மட்டம் 43.66 அடி

**ஈரோடு,**

பவானிசாகர் அணையின் நீர்மட்டம் திங்கள்கிழமை நிலவரப்படி 43.66 அடியாக இருந்தது.

அணையின் அதிகபட்ச நீர்த்தேக்க உயரம் 105 அடி. அணைக்கு விநாடிக்கு 129 கன அடி நீர் வந்தது.

அணையில் இருந்து ஆற்றில் 150 கன அடி நீரும், வாய்க்காலில் 2,300 கன அடி நீரும் திறந்துவிடப்பட்டது. அணையில் நீர்இருப்பு 3.09 டி.எம்.சி.

## காரைக்காலில் வண்டு இறால் வரத்து அதிகரிப்பு

**காரைக்கால்,**

காரைக்கால் கடல் பகுதியில் வண்டு இறால் எனப்படும் சிறிய வகை இறால் வரத்து தற்போது அதிகரித்துள்ளது.

மீன்பிடித் தடைக்காலம் தொடங்கும் சூழலில் இவ்வகை வரத்து, விசைப்படகு மீனவர்களிடையே உற்சாகத்தை குறைத்துள்ளது.

ஏப்ரல் மாதம் தொடங்கி ஜூன் மாதம் வரையில் கிடைக்கும் வண்டு இறால், அளவில் சிறிதாக இருந்தாலும் சுவை மிக்கதாக இருக்கும். காரைக்கால் கடல் பகுதியில் இதன் சீசன் தற்போது தொடங்கியுள்ளது. கடந்த சில நாள்களாக விசைப்படகு மீனவர்கள் வலையில் அதிகளவில் வண்டு இறால்கள் சிக்குகின்றன. இதை முகவர்கள் ஆர்வமாக வாங்கி, கேரளம் உள்ளிட்ட வெளிமாநிலங்களுக்கு

கொண்டு செல்கின்றனர். 40 கிலோ முதல் 50 கிலோ வரை எடையுள்ள ஒரு பெட்டி, ரூ. 1000 முதல் ரூ. 1200 வரை அளவைப் பொருத்து விற்பனையாகிறது.

ஏப்ரல் 15-ம் தேதி முதல் மீன்பிடித் தடைக்காலம் தொடங்கியுள்ள நிலையில், விசைப் படகுகள் முடக்கப்படும். இப்போது இந்த சீசன் தொடங்கியிருப்பது விசைப்படகு மீனவர்கள் லாபம்ஈட்ட முடியாத நிலை ஏற்பட்டுள்ளது.

பைபர் படகு மீனவர்கள், வண்டு இறால்களை பிடித்து வரும்போது உள்ளூர் சந்தைக்கும் அவை அனுப்பிவைக்கப்படும் என மீனவர்கள் தெரிவித்தனர்.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

## 'தமிழகத்தில் நாளை மழை சந்தேகமே'

**சென்னை**: 'தமிழகம் மற்றும் புதுச்சேரியில் இன்று மட்டும் மழைக்கு வாய்ப்பு; நாளை முதல், வறண்ட வானிலையே நிலவும்' என, சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வெப்பச் சலனம் காரணமாகவும், வங்கக்கடலில் நிலவும் காற்று மேலடுக்கு சுழற்சியாலும், கடந்த ஒரு வாரத்திற்கும் மேலாக, தென் தமிழகத்தின் சில பகுதிகள் மற்றும் மேற்கு தொடர்ச்சி மலைப் பகுதிகளில் ஆங்காங்கே மழை பெய்து வருகிறது. நேற்று காலை நிலவரப்படி, கன்னியாகுமரி மாவட்டம், பேச்சிப்பாறையில், 2 செ.மீ., மற்றும் நெல்லை மாவட்டம், தென்காசியில், 1 செ.மீ., மழையும் பதிவாகியுள்ளது.

கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில், களியக்காவிளை, குழித்துறை பகுதிகளிலும், நெல்லை மாவட்டம், சங்கரன் கோவில் உள்ளிட்ட பகுதிகளில், ஆங்காங்கே, தொடர்ந்து மழை பெய்து வருகிறது. இந்த மழை இன்றும் பெய்ய வாய்ப்புள்ளதாகவும், நாளை முதல் வறண்ட வானிலையே நிலவும் என்றும், சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

வெப்பநிலையை பொறுத்தவரை, சென்னையில், இயல்பளவாக, 35 டிகிரி செல்சியஸ் பதிவாகியுள்ளது. அதிகபட்சமாக, திருச்சியில், 40 டிகிரி, மதுரை, திருத்தணி, சேலம், பாளையங்கோட்டையில், 39 டிகிரி செல்சியஸ் வெப்பமும் பதிவாகியுள்ளது.

## மீன்பிடி தடை காலம் நள்ளிரவு முதல் அமல்

**சென்னை** : மீன்களை தொந்தரவு செய்யக் கூடாத, 45 நாள் தடைக்காலம், இன்று நள்ளிரவு முதல் அமலுக்கு வருவதால், கடலுக்குள் சென்ற விசைப்படகுகள் அவசர அவசரமாக கரை திரும்புகின்றன.

தமிழகம், ஆந்திரா, புதுச்சேரி உள்ளிட்ட கிழக்கு கடற்கரை பகுதிகளில் (வங்க கடல்), ஏப்., மே மாதங்கள், மீன்களின் இனவிருத்தி காலமாக கண்டறியப் பட்டுள்ளது. இந்த நாட்களில், மீன் உள்ளிட்ட கடல் உயிரிகள் முட்டை இட்டு, குஞ்சு பொரித்து இனவிருத்தி செய்யும் என்பதால், மீன் வளத்தை பெருக்கும் நோக்கில், ஏப்., 15 முதல், 45 நாட்கள் மீன்பிடிக்க, அரசு தடை விதித்துள்ளது. இந்த தடை, இன்று நள்ளிரவு முதல் அமலுக்கு வருகிறது. இதன் காரணமாக, கடலுக்குள் மீன்பிடிக்கச் சென்ற விசைப்படகுகள் எல்லாம், அவசர அவசரமாக கரை திரும்புகின்றன.

மீன் வரத்து அதிகமாக உள்ளதால், மீன் வகைகளின் விலை வழக்கத்தை விட, 30 சதவீதம் வரை குறைந்து விட்டது. இன்று நள்ளிரவுக்குள், எல்லா படகுகளும் கரைக்கு திரும்ப வேண்டும்.

இன்று நள்ளிரவு முதல், சென்னையில், 1,300 விசைப் படகுகள் உட்பட, தமிழகம் முழுவதும், 13 ஆயிரம் விசைப் படகுகள், கடலுக்குள் மீன்பிடிக்க செல்லாது; கரையில் ஓய்வெடுக்கும். இந்த காலத்தை, விசைப்படகுகளை பராமரிக்கும் காலமாக மீனவர்கள் பயன்படுத்துவர். 'விசைப்படகுகள், இழு வைப் படகுகள் மூலம் மீன்பிடிக்க தடை இருந்தாலும், கட்டுமரம், பைபர் படகுகள் மூலம் மீன் பிடிக்க எந்த தடையும் இல்லை. இதன் வாயிலாக, மீன் வரத்து கல், ஒரு பங்கு கூட இருக்காது என்பதால், ஒரு வாரத்தில் மீன் விலை வெகுவாக உயரும்' என, மீனவர்கள் கூறினர்.

## ரூ.25 லட்சத்துக்கு பருத்தி விற்பனை

**ராசிபுரம்**: ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தில், நேற்று, 25 லட்சம் ரூபாய்க்கு, பருத்தி ஏலம் போனது. ராசிபுரம் வேளாண் கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர் சங்கத்தின் (ஆர்.சி.எம்.எஸ்.,) கவுண்டம்பாளையம் குடோனில், பருத்தி ஏலம், நேற்று, நடந்தது. சீராப்பள்ளி, சிங்காளந்தபுரம், கதிராநல்லூர், பட்டணம் வடுகம், நாமகிரிப்பேட்டை, கரடியானூர், புதுப்பாளையம், கல்யாணி உள்ளிட்ட பல்வேறு பகுதியில் இருந்து, 100க்கும் மேற்பட்ட விவசாயிகள், 1,540 பருத்தி மூட்டைகளை, விற்பனைக்கு கொண்டு வந்தனர். டி.சி.ஹெச்., ரகம் அதிகபட்சமாக, 7,068, குறைந்த பட்சமாக, 5,116 ரூபாய், ஆர்.சி.ஹெச்., ரகம் அதிகபட்சமாக, 5,668, குறைந்த பட்சமாக, 4,319 ரூபாய்க்கு ஏலம் போனது. அவிநாசி, கொங்கணாபுரம் ஆகிய பகுதிகளைச் சேர்ந்த, 20க்கும் மேற்பட்ட வியாபாரிகள், பருத்தியை, 25 லட்சம் ரூபாய்க்கு ஏலம் எடுத்துச் சென்றனர்.

## ஓசூரில் இடியுடன் கூடிய மழை

**ஓசூர்**: ஓசூரில் நேற்று மாலை, இடியுடன் கூடிய மழை பெய்தது. ஓசூரில் கோடை காலத்தில் கூட, இதமான கால நிலையே நிலவும். ஆனால், கடந்த இரண்டு ஆண்டுகளாக கடும் வெயில் கொளுத்தி வருகிறது. வடகிழக்கு மற்றும் தென்மேற்கு பருவமழை பொய்த்து போனதால், கடும் வறட்சி நிலவி வருகிறது. மேலும், நிலத்தடி நீர்மட்டம் அதாள பாதாளத்துக்கு சென்று விட்டது. ஓசூரின் சுற்று வட்டார பகுதிகளில், மழை பெய்தாலும், ஓசூர் டவுன் பகுதியில் மழை பொய்த்து வந்தது.

கடந்த, 9ம் தேதி கூட, கெலமங்கலம், தேன்கனிக்கோட்டை பகுதிகளில், மிதமான அளவில் மழை பெய்தது. ஆனால், ஓசூர் டவுன் பகுதியில், ஒரு சில நிமிடங்கள் மட்டும் லேசாக சாரல் மழை பெய்தது.

மேலும், அவ்வப்போது, வானம் மேகமூட்டமாக காணப்படுவதும், குளிர்ந்த காற்று வீசுவதுமாகவே இருந்து வந்தது. இந்நிலையில், நேற்று காலை வழக்கம் போல் வெயில் இருந்தது. மாலை, 6 மணிக்கு கருமேகங்கள் சூழ, இரவு, 7 மணிக்கு, மிதமான அளவில், இடி மின்னலுடன் கூடிய மழை பெய்தது. இந்த திடீர் மழை

காரணமாக, இரவு முழுவதும் குளிர்ந்த காற்று வீசியது. இதனால், ஓசூர் பகுதி பொதுமக்கள் நிம்மதி பெருமூச்சு விட்டனர்.

## கோமாரி நோய் பாதிப்புள்ளதா என கண்டறியும் பணி மும்முரம்; கிராமங்களுக்கு செல்லும் கால்நடைத்துறையினர்

**திண்டுக்கல்** : கோமாரி தடுப்பூசி முகாமிற்கு பின், கால்நடைகளுக்கு பாதிப்புள்ளதா என்பதை கண்டறிவதற்காக கால்நடைத்துறையினர், கிராமங்களில் கண்காணிப்பு மற்றும் விசாரணை பணியை மேற்கொண்டுள்ளனர்.

மனிதர்களை பாதிப்பிற்குள்ளாக்கிய போலியோவை, நாட்டிலிருந்து முற்றிலுமாக ஒழித்ததை போன்று, கால்நடைகளை தாக்கும் கோமாரியையும், தடுப்பதற்கான முயற்சிகள் கால்நடைத்துறையினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதற்காக ஐந்து ஆண்டுகள் தொடர்ச்சியாக கோமாரி தடுப்பூசி செலுத்த உத்தரவிடப்பட்டுள்ளது. ஆறு மாதத்திற்கு ஒருமுறை இந்த முகாம் நாடு முழுவதும் நடத்தப்படுகிறது. இதுவரை ஆறு சுற்றுகள் முடிந்துள்ளன.

கடந்த ஆண்டின் இறுதி சுற்றில், ஏராளமான கால்நடைகள் கோமாரி நோயால் பாதிக்கப்பட்டு இறந்தன. விழிப்புணர்வு இல்லாததால், கால்நடைகளை முகாமிற்கு அழைத்து வருவதில், உரிமையாளர்கள் தயங்குவதாக காரணம் தெரிவிக்கப்பட்டது.

இதை தவிர்ப்பதற்காக, இந்த ஆண்டின் துவக்கத்தில் பல்வேறு குழுக்கள் நியமிக்கப்பட்டு, தண்டோரா மற்றும் உள்ளாட்சி பிரதிநிதிகளின் உதவியோடு பிரசாரம் மேற்கொள்ளப்பட்டது.

இதனால், விடுதல் இல்லாமல் அனைத்து கால்நடைகளுக்கும் கோமாரி தடுப்பூசி செலுத்தப்பட்டது. முகாம் நிறைவுற்று 20 நாட்கள் கடந்துள்ள நிலையில், நோய் பாதிப்பின் நிலை குறித்து அறிக்கை தயாரிப்பதற்காக கால்நடைத்துறையினர், கிராமங்களுக்கு சென்று விசாரணை மேற்கொண்டுள்ளனர்.

இதுவரை, கோமாரி நோய் தாக்குதல் குறித்து எந்த புகாரும், விவசாயிகளிடமிருந்து பெறப்படவில்லை, என, கால்நடைத்துறையினர் தெரிவித்தனர்.

## வெறிச்சோடியது ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட்

**ஒட்டன்சத்திரம்** : கேரள வியாபாரிகள் காய்கள் வாங்க வராததால், ஒட்டன்சத்திரம் மார்க்கெட் நேற்று வெறிச்சோடி காணப்பட்டது. ஒட்டன்சத்திரம் மற்றும் சுற்றி உள்ள கிராமப்பகுதிகளில் விளையும் காய்கறிகள் மட்டுமின்றி பக்கத்து மாவட்டங்களில் விளையும் காய்களும், ஒட்டன்சத்திரம் மார்க்கெட்டிற்கு விற்பனைக்கு கொண்டு வரப்படுகிறது. இங்கு விற்கப்படும் காய்களில் அதிகளவு கேரள வியாபாரிகள்தான் வாங்கி செல்கின்றனர். இதனால் ஒட்டன்சத்திரம் காய்கறி மார்க்கெட் பெருமளவு கேரள வியாபாரிகளை சார்ந்துள்ளது. கேரளாவில் இன்று புத்தாண்டு கொண்டாடப்படுவதால். அங்கிருந்து வியாபாரிகள் எவரும் காய்கள் வாங்க வரவில்லை. இத்துடன் தமிழகத்தில் நேற்று புத்தாண்டு கொண்டாடப்பட்டதாலும், விவசாயிகளில் பலர் காய்களை பறித்துக்கொண்டு மார்க்கெட்டிற்கு வரவில்லை. இதன் காரணமாக மார்க்கெட் வெறிச்சோடி காணப்பட்டது.கமிஷன் கடை உரிமையாளர் சங்க செயலாளர் பொன்ராம் கூறுகையில், ""கேரள விசுவை முன்னிட்டு வியாபாரிகள் வராததால் மார்க்கெட் வெறிச்சோடியது," என்றார்.

## சூரியகாந்தி விதைக்கு அதிகவிலை; வேளாண் கையேடு வினியோகம்

**திண்டுக்கல்** : தரத்தின் அடிப்படையில் சூரியகாந்தி விதைகளுக்கு விலை நிர்ணயிக்கப்படும் என்பதால், அவற்றை பிரித்தெடுப்பதற்கான வழிமுறைகள் அச்சிடப்பட்ட குறிப்பேடுகள் விவசாயிகளுக்கு வினியோகிக்கப்படுகின்றன. எண்ணெய்வித்து பயிரான சூரியகாந்தியின் தேவை, ஆண்டுதோறும் அதிகரித்து வருவதால், அவற்றை சாகுபடி செய்வதில் விவசாயிகள் ஆர்வமாக உள்ளனர். திண்டுக்கல் மாவட்டத்தில் 2 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் சூரியகாந்தி விளைவிக்கப்படுகிறது. அறுவடைக்கு பின் 3 ஆயிரத்து 647 மெட்ரிக் டன் வித்துகள் சேகரிக்கப்படுகின்றன. இதில், 3 ஆயிரத்து 282 மெட்ரிக் டன் வித்துகள், எண்ணெய் தேவைக்காக பிற மாநிலங்களுக்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. சூரியகாந்தி சாகுபடியில் விவசாயிகள் ஆர்வம் செலுத்தினாலும், அறுவடைக்கு பின் கடைபிடிக்க வேண்டிய வழிமுறைகளை பின்பற்றாமலிருப்பதால், தரமற்ற விதைகளையே அதிகமாக சேகரிக்கும் நிலை ஏற்படுகிறது. இதை தவிர்ப்பதற்கான ஆலோசனையை வேளாண்மை துறையினர் அச்சடித்து விவசாயிகளுக்கு

வினியோகித்து வருகின்றனர். சூரிய காந்தியின் இலைகள் பழுத்து மஞ்சள் நிறமாக மாறவேண்டும். பூக்கொண்டைகள் பழுப்பு நிறமேறிய பின்புதான் அறுவடை செய்ய வேண்டும்.

விதைகளின் மேல்புறம் கருமையாகவும், உட்புறம் வெள்ளையாகவும் இருக்க வேண்டும். அறுவடை செய்யப்பட்ட பூந்தலையை ஒரே சீராக பரப்பி காயவைக்க வேண்டும். கதிர் அடிக்கும் இயந்திரங்களை பயன்படுத்தி காய்ந்த பூக்களில் இருந்து விதைகளை பிரித்தெடுக்க வேண்டும்.

நல்ல விதையுடன் கலந்துள்ள முதிராத விதைகள், பூச்சி தாக்கிய விதைகளை அப்புறப்படுத்த வேண்டும்.

மீதமுள்ள விதைகளை சந்தைக்கு கொண்டு சென்றால், எதிர்பார்த்த விலை கிடைக்கும் என வழிமுறை கையேட்டில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## அறுவடைக்கு தயாராக இருந்த நெற்பயிர்கள் மழையால் சேதம்

**தேவதானப்பட்டி** : ஜெயமங்கலம் பகுதியில் நேற்று முன்தினம் இரவில், பலத்த காற்றுடன் மழை பெய்தது.

இதில் அறுவடைக்கு தயாரான நெற்பயிர்களில் பாதிப்பு ஏற்பட்டுள்ளது. பெரியகுளம் ஒன்றியம், ஜெயமங்கலம் பகுதியில் கடந்த 2 ஆண்டுகளாக போதிய அளவு மழை பெய்யவில்லை. இங்குள்ள வேட்டுவன் குளம் கண்மாய் வறண்டுள்ளது. இதனால் நிலத்தடி நீர்மட்டம் 800 அடிக்கும் கீழ் சென்று விட்டது. 50க்கும் மேற்பட்ட விவசாய கிணறுகளில், நீர் வற்றிவிட்டது.

600 ஏக்கரில் ஆண்டுதோறும் நடந்து வரும் நெல் சாகுபடியை நடப்பு ஆண்டில் விவசாயிகள் தவிர்த்தனர். இந்நிலையில், சில இடங்களில் போர்வெல்களில் குறைந்த அளவு கிடைத்து வரும் நீரை ஆதாரமாகக் கொண்டு நெல் நடவுப் பணியில் விவசாயிகள் ஈடுபட்டிருந்தனர்.

இன்னும் சில நாட்களில் அறுவடைக்கு தயாராக நெல் வயல்கள் இருந்தன. இந்நிலையில், நேற்று முன்தினம் ஜெயமங்கலம் பகுதியில் பலத்த காற்றுடன் மழை பெய்தது.

இதனால் அறுவடைக்கு தயாராக இருந்த நெல்வயல்களில் கதிர் தரையில் சாய்ந்து சேதம் ஏற்பட்டது.

விவசாயிகள் கூறியதாவது: நெல் சாகுபடி செய்ய ஒரு ஏக்கருக்கு 20 ஆயிரம் ரூபாய் வரை செலவாகிறது.

அறுவடைக்கு தயாராக இருந்த நிலையில், பலத்த காற்று மழையால் நெல்மணிகள் தரையில் சாய்ந்து உதிர்ந்து வருகிறது. இயற்கையின் இச்செயல் கவலையளிக்கிறது, என்றனர்.

## புத்தாண்டில் நெல் விதைப்பு

**திருவாடானை** : திருவாடானையில் தமிழ் புத்தாண்டை முன்னிட்டு, விவசாயிகள் நெல் விதைத்தனர்.

திருவாடானை ஆதிரெத்தினேஸ்வரர், திருவெற்றியூர் பாகம்பிரியாள், தொண்டி சிவன் கோயில்களில் சிறப்பு பூஜைகள் நடந்தது. மேலரதவீதி முத்துமாரியம்மன் கோயிலில், 108 சங்காபிஷேகம் நடந்தது.

பஸ்ஸ்டாண்டு அருகே விநாயகர் கோயிலில், சிறப்பு பூஜைகள் நடந்தது. விவசாயிகள் நிலங்களில் சம்பிரதாயத்திற்காக நெல் விதைத்தனர்.

இந்த ஆண்டாவாது அமோக விளைச்சல் ஆக வேண்டும் என்று கோயில்களில் அர்ச்சனை செய்தனர்.

நேற்று காலை 6 மணிக்கு சாரல் மழை பெய்தது. விவசாயிகள் கூறுகையில், ""ஆடி மாதத்திற்கு பின் தான், முழு விதைப்பு நடைபெறும்," என்றனர்.

## நாகர்கோவில் பகுதியில் இடிமின்னலுடன் மழை

**நாகர்கோவில்** : நாகர்கோவில் பகுதியில் நேற்று காலை முதல் வெயில் கொளுத்தி வந்தது. பிற்பகல் முதல் திடீரென்று வானம் மேகமூட்டத்துடன் காணப்பட்டது. பின்னர் இடி மின்னலுடன் மழை கொட்டியது.

இதனால் வெப்பத்தின் தாக்கம் சற்று தணிந்தது. நேற்று காலை நிலவரப்படி பேச்சிப்பாறை அணை நீர் மட்டம் 12.85 அடியாக இருந்தது.

பெருஞ்சாணி நீர்மட்டம் 36.65 அடியாகவும், சிற்றார்-1ல் 2.82 அடியும், சிற்றார்-2ல் 2.92 அடியும், பொய்கையில் 2.20 அடியும் மாம்பழத்துணையாறு அணையில் 41.53 அடியும் நீர்மட்டம் காணப்பட்டது.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

### ராசிபுரத்தில் பருத்தி ஏலம் அமோகம்



**ராசிபுரம்** : ராசிபுரம் வேளா ண்மை கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தில், 1,540 மூட்டை பருத்தி ரூ.25 லட்சத்திற்கு ஏலம் போனது.ராசிபுரம் வேளாண்மை கூட்டுறவு உற்பத்தி விற்பனையாளர்கள் சங்கத்தின் (ஆர்.சி.எம்.எஸ்.) சார்பில் ராசிபுரம் அருகே உள்ள கவுண்டம்பாளையம் குடோனில் பருத்தி ஏலம் நடந்தது.

இதில் சீராப்பள்ளி, பட்டணம் வடுகம், நாமகிரிப்பேட்டை, மங்களபுரம், திம்மநாய்க்கன்பட்டி, தொப்பபட்டி ஜேடர்பாளையம், அத்திபலகானூர், கரடியானூர், புதுப்பாளையம், சிங்காளந்தபுரம், கதிராநல்லு£ர், கல்யாணி, கோரைக்காடு, மற்றும், ஆத்துத£ர் உள்ளிட்ட பல்வேறு ஊர்களிலிருந்து விவசாயிகள் 1,540 மூட்டைகளை ஏலத்திற்கு கொண்டு வந்தனர்.

இந்த ஏலத்தில் டிசிஹெச் ரகம் அதிக பட்சமாக 7,068க்கும் குறைந்தபட்சமாக ரூ.5,116க்கும் ஏலம் போனது.


ஆர்.சி.ஹெச் ரகம் அதிகபட்சமாக ரூ.5,668க்கும் குறைந்தபட்சமாக ரூ.4,319 க்கும் ஏலம் போனது. மொத்தம் 1,540 மூட்டை பருத்தி ரூ.25 லட்சத்திற்கு விற்பனையானது.

**காரைக்கால் கடற்பகுதியில் வண்டு இறால் வரத்து அதிகரிப்பு**



**காரைக்கால்** : பிப்ரவரி முதல் ஏப்ரல் மாதம் வரை ஆழ்கடலில் கிடைக்கும் தக்காளி இறால் என்று அழைக்கப்படும் ரெட் ரிங் இறால் சீசன் முடியும் தருவாயில், வண்டு இறால் வரத்து அதிகரிக்கும். கடந்த 3 நாட்களாக இந்த வகை இறால் வரத்து அதிகமாக உள்ளது.காரைக்கால் துறைமுகத்திலிருந்து சுமார் 25 முதல் 35 கிலோ மீட்டர் வரை ஆழ்கடலில் செல்லும் விசைப்படகு மீனவர்கள், கடலில் 2 முதல் 4 நாட்கள் தங்கி இந்த வகை இறாலை பிடித்து வருவார்கள். இந்த இறால், 40 கிலோ கொண்ட ஒரு பெட்டி ரூ.1,000 முதல் ரூ.1,200 வரை விலைபோகிறது. வெளிமாநிலங்களுக்கும் ஏற்றுமதியாகிறது. நாளை இரவு முதல் விசைப்படகு மீனவர்கள் கடலுக்குள் செல்ல மாட்டார்கள் என்பதால், பைபர் படகு மீனவர்கள்தான் இந்த வகை இறால்களை பிடித்துவருவார்கள்.

**முட்டை விலை 266 காசுகளாக நிர்ணயம்**



**நாமக்கல்:** நாமக்கல்லில் தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழுவின் விலை நிர்ணய குழு கூட்டம் நேற்று நடந்தது. இதில் முட்டை விலையில் 11 காசுகள் உயர்த்த முடிவு செய்யப்பட்டது. அதை தொடர்ந்து ஒரு முட்டையின் விலை 255 காசில் இருந்து 266 காசாக உயர்த்தி நிர்ணயம் செய்யப்பட்டது. தமிழகம் மற்றும் கேரளாவில் முட்டை விற்பனை அதிகரித்து வருவதால், நாமக்கல் மண்டலத்திலும் விலை உயர்த்தப்பட்டுள்ளது.

**மாம்பழத்தை இயற்கை முறையில் பழுக்க வைக்க வேண்டும்**

**தர்மபுரி**, : தர்மபுரி மாவட்டத்தில் 16 ஆயிரம் ஹெக்டேர் பரப்பளவில் செந்தூரம், அல்போன்சா, பீத்தர், பெங்களூரா, மல்கோவா போன்ற ரக மா மரங்கள் வளர்க்கப்படுகின்றன. இவற்றை தர்மபுரி மாவட்டத்தில் உள்ள 300க்கும் மேற்பட்ட வியாபாரிகள் பல்வேறு வெளியூர்களுக்கு மாம்பழங்களை விற்பனை செய்து வருகின்றனர்.

இந்நிலையில் மாம்பழ குடோன்களில் பழங்களை புகை போட்டு பழுக்க வைக்க இருட்டறை வசதி செய்யப்பட்டிருக்கும். இந்த முறையில் பழுக்கும் மாம்பழங்கள் ஒரே மாதிரி பழுப்பதில்லை. இதனால் மக்கள் விரும்பி வாங்க தயக்கம் காட்டுவர். இதனால் சில மாம்பழ வியாபாரிகள் கார்பைடு கல் மூலம் பழுக்க வைக்கின்றனர். இவ்வாறு கல் வைத்து பழுக்க வைக்கப்பட்ட பழங்களை தொடர்ந்து வாங்கி சாப்பிடுபவர்களுக்கு வயிற்று வலி, வயிற்றுப்புண், வயிற்று போக்கு போன்ற வயிறு தொடர்பான உபாதைகள் ஏற்படும். இதனால் சுகாதார துறை அதிகாரிகள் அவ்வபோது மாம்பழ குடோன்களை ஆய்வு செய்து கார்பைடு கல் முறையில் பழுக்க வைத்த பழங்களை அழித்து நடவடிக்கை எடுப்பர்.

இந்நிலையில் தர்மபுரி மாவட்ட தோட்டக்கலை துறை அதிகாரிகள் கல்வைத்து பழுக்க வைக்கும் முறைக்கு மாற்றாக இயற்கையான முறையில் காய்கள் பழுக்க வைக்க எத்ரல் பயன்படுத்த வேண்டும் என தெரிவித்துள்ளனர்.

இது குறித்து தர்மபுரி மாவட்ட தோட்டக்கலை அதிகாரிகள் கூறியதாவது: முக்கனிகளில் ஒன்றான மாம்பழத்தை விரும்பாதவரோ, சாப்பிடாதவோரா யாரும் இருக்க முடியாது. தமிழகத்தில் தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் தான் அதிகமாக மாம்பழம் விளைவிக்கப்படுகிறது. தர்மபுரி மாவட்டத்தில் தர்மபுரி,

நல்லம்பள்ளி, காரிமங்கலம், பாப்பிரெட்டிபட்டி, அரூர், பாலக்கோடு, பென்னாகரம், பாப்பாரப்பட்டி உள்ளிட்ட 8 பிளாக்கிலும் மா விளைவிக்கப்படுகிறது.

மாங்காயை பழுக்க வைக்க காய் குவியலுக்கு ஓரத்தில் கார்பைடு கல் வைத்து பழுக்க வைக்கின்றனர். இந்த பழங்களை சாப்பிடுவர்களுக்கு வயிறு தொடர்பான பிரச்னைகள் ஏற்படுகிறது. இதற்கு பதிலாக இயற்கையான முறையில் மாம்பழம் பழுக்க வைக்க புதிய முறை நடைமுறைப்படுத்தப்பட்டு வருகிறது.

எத்ரல் வளர்ச்சி ஊக்கி எனும் மருந்தை 2 மிலியை ஒரு லிட்டர் தண்ணீரில் ஊற்றி கலந்து மாங்காய்களை இந்த கரைசலில் நனைத்து வைக்க வேண்டும். இம்முறையில் காய்கள் விரைவில் ஒரே மாதிரி பழுத்துவிடும். இயற்கையான முறையில் மாம்பழங்களை பழுக்க வைப்பதால் உடல் நலத்திற்கு தீங்கு எதுவும் ஏற்படாது.

பெரிய அளவில் காய்களை பழுக்க வைக்க எத்திலின் வாயுவை பயன்படுத்தலாம். மாம்பழ குடோன் வைத்து பழுக்க வைக்கும் வியாபாரிகள் அருகில் உள்ள தோட்டக்கலை துறை அதிகாரிகளிடம் செயல் விளக்கத்தை பெற்று பயன் பெறலாம் என்றனர்.

## அரூரில் குண்டுமல்லி விலை அதிகரிப்பு

**அரூர்,**: அரூர் பகுதியில் விசேஷ நாட்களையொட்டி குண்டுமல்லி உள்ளிட்ட பூக்களின் விலை கிடுகிடுவென உயர்ந்துள்ளது.

அரூர் பகுதியில் கீழ்செங்கப்பாடி, குரும்பட்டி, பாரிவனம், ஆண்டியூர், வீரப்பநாய்க்கன்பட்டி, தீர்த்தமலை, பாப்பிரெட்டிப்பட்டியில் பொம்மிடி பகுதியிலும் அதிக அளவில் குண்டுமல்லி சாகுபடி செய்யப்படுகிறது. கடந்த வாரத்தில் கிலோ ரூ.100 முதல் ரூ.120 வரை விற்பனை செய்யப்பட்டது. தற்போது தொடர்ந்து பங்குனிஉத்திரம், தமிழ் வருட பிறப்பு, சித்திரை மாத பவுர்ணமி, சுபமுகூர்த்த நாட்கள் என விசேஷங்கள் தொடர்ந்து வருவதால் குண்டுமல்லி கிலோவிற்கு ரூ.100 வரை அதிகரித்துள்ளது. குண்டுமல்லி தற்போது மொத்த விற்பனையில் கிலோ ரூ. 220க்கும், சில்லறை வியாபாரிகள் 100 கிராம்

ரூ.30 - 35 வரையும் விற்பனை செய்யப்படுகிறது. இதே போல் பட்டன்ரோஸ், சம்பங்கி, சாமந்தி உள்ளிட்ட பூக்களின் விலையும் கணிசமாக உயர்ந்துள்ளது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**வெங்காய ஏற்றுமதியில் இந்தியாவுடன் போட்டியிடும் சீனா**



**புனா,**

இந்தியாவின் பாரம்பரிய வெங்காயம் ஏற்றுமதி சந்தைகளை குறிவைத்து சீனா வெங்காயம் ஏற்றுமதியை ஊக்கப்படுத்தி வருகிறது. ஆக, வெங்காயம் ஏற்றுமதியில் இந்தியாவுக்கு கடும் போட்டியை கொடுக்க சீனா தொடங்கியுள்ளது.

உற்பத்தி

சர்வதேச அளவில் வெங்காயம் உற்பத்தியில் சீனாவுக்கு அடுத்தபடியாக இந்தியா இரண்டாவது இடத்தில் உள்ளது. அதேசமயம் வெங்காயம் ஏற்றுமதியில் நம்நாடு தான் முன்னணியில் உள்ளது. சில நேரங்களில் அல்லது சந்தர்ப்பங்களில் நெதர்லாந்து வெங்காயம் ஏற்றுமதியில் முதல் இடத்தை கைப்பற்றும். ஆனால் பெரும்பான்மையான அளவில் இந்தியாதான் வெங்காயம் ஏற்றுமதியில் ஆதிக்கம் செலுத்தி வருகிறது.

<u>சுவை மற்றும் தரம்</u>

தேசிய தோட்டக்கலை ஆய்வு மற்றும் மேம்பாட்டு அமைப்பின் இயக்குனர் ஆர்.பி.குப்தா இது குறித்து கூறியதாவது, ''இந்திய வெங்காயம் போன்ற தரம் மற்றும் கலர் உடைய வெங்காயம் சாகுபடியை சீனா ஊக்குவித்து வருகிறது. ஆனால் நம்நாட்டின் சீதோஷ்ண நிலைக்கும் சீனாவின் கால நிலைக்கும் வித்தியாசமாக உள்ளதால் நம் நாட்டின் வெங்காயம் சுவையிலும், தரத்திலும் உயர்ந்து விளங்குகிறது'' என அவர் தெரிவித்தார்.

சீனாவின் நெருக்கடியால் இந்திய ஏற்றுமதி பாதிக்காது என ஏற்றுமதியாளர்கள் உறுதியாக உள்ளனர். இந்திய வெங்காயத்தின் சுவை மற்றும் தரத்தோடு ஒப்பிடும் போது மற்ற நாடுகள் பின்தங்கியே உள்ளன. மேலும் பாரம்பரிய சந்தைகள் இந்தியாவிலிருந்து வெங்காயம் இறக்குமதி செய்வதற்கே முன்னுரிமை அளிக்கும். அதன்பிறகே பாகிஸ்தான், ஈரான், எகிப்து மற்றும் சீனா ஆகிய நாடுகளில் இறக்குமதி செய்யும்.

கடந்த 2012–13–ஆம் நிதி ஆண்டில் ரூ.1,966.67 கோடிக்கு 16.66 லட்சம் டன் வெங்காயம் ஏற்றுமதியாகியுள்ளது. நம் நாட்டிலிருந்து மலேசியா, வங்காளதேசம், ஐக்கிய அரபு நாடுகள், இலங்கை, இந்தோனேசியா, சிங்கப்பூர், குவைத் ஆகிய நாடுகளுக்கு வெங்காயம் அதிக அளவில் ஏற்றுமதியாகிறது.

**மீன்கள் இனப்பெருக்கத்திற்காக தமிழகம் முழுவதும் மீன்பிடி தடைக்காலம் இன்று இரவு முதல்**



**ராயபுரம்,**

கடலில் மீன்களின் இனப்பெருக்கத்திற்காக தமிழகம் முழுவதும் மீன்பிடி தடைக்காலம் இன்று (செவ்வாய்க்கிழமை) நள்ளிரவு முதல் அமலுக்கு வருகிறது. இதனால் தமிழ்நாட்டில் 12 ஆயிரத்திற்கும் அதிகமான விசைப்படகுகள் நிறுத்தப்பட்டன.

## மீன்பிடி தடைக்காலம்

தமிழக கடல் பகுதிகளில் மீன்களின் இனப்பெருக்கத்திற்காகவும், கடல் வளத்தை பாதுகாக்கவும் ஆண்டுதோறும் ஏப்ரல் 15–ந் தேதி முதல் மே 29–ந் தேதி வரை 45 நாட்கள் மீன்பிடி தடைக்காலம் அமல்படுத்தப்படுகிறது. இந்த ஆண்டிற்கான மீன்பிடி தடைக்காலம் இன்று நள்ளிரவு 12 மணி முதல் அமலுக்கு வருகிறது.

அதனைத் தொடர்ந்து சென்னை காசிமேடு மற்றும் அதனை சுற்றியுள்ள கடற்கரை பகுதியில் உள்ள ஆயிரம் படகுகள் கடலுக்கு செல்லாமல் கரையில் நிறுத்தப்பட்டன. இதேபோல் தமிழகம் முழுவதும் 12 ஆயிரத்திற்கும் அதிகமான விசைப்படகுகள் கடற்கரை பகுதிகளில் நிறுத்தப்பட்டன.

மேலும் மீன் பிடிப்பதற்காக ஏற்கனவே கடலுக்கு சென்ற படகுகளும் கரைக்கு திரும்பி வந்து கொண்டிருக்கின்றன. அடுத்து மே மாதம் 30–ந் தேதி தான் மீன்பிடி தடைக்காலம் முடிந்து மீனவர்கள் கடலுக்கு திரும்பச் செல்வார்கள்.

## மீனவர்கள் கோரிக்கை

இந்த மீன்பிடி தடைக்காலத்தில் தமிழகத்தின் 13 கடலோர மாவட்டங்களில் உள்ள சுமார் 75 லட்சம் மீனவர்கள் கடலுக்கு செல்லாமல் வேலை இழக்கின்றனர். இந்த 45 நாட்களில் மீனவர்களின் நலனுக்காக தமிழக அரசு ஒவ்வொரு மீனவர் குடும்பத்துக்கும் ரூ.2 ஆயிரம் மானியமாக வழங்குகிறது. இது மீனவர்களின் குடும்ப தேவைகளுக்கு போதுமானதாக இல்லை. மானியத்தை ரூ.30 ஆயிரமாக மத்திய, மாநில அரசுகள் பகிர்ந்தளிக்க வேண்டும்.

இந்த தடைக்காலங்களில் வெளிமாநில, வெளிநாட்டு மீனவர்கள் தமிழக கடல் பகுதியில் மீன் பிடிப்பதை தடுக்க வேண்டும், மீன்கள் இனப்பெருக்கம் செய்யும்

இடங்களை கண்டறிந்து அங்கு செயற்கை முறையில் பாறைகள் அமைத்து மீன்கள் இனப்பெருக்கத்திற்கு உதவ நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

**உழவர் சந்தைகளில் தமிழ் புத்தாண்டை முன்னிட்டு காய்கறிகள் 40¾ லட்சத்துக்கு விற்பனை**



**சேலம்,**

சேலம் மாவட்ட உழவர் சந்தைகளில் தமிழ் புத்தாண்டு தினத்தை முன்னிட்டு நேற்று காய்கறிகள் ரூ.40 லட்சத்து 94 ஆயிரத்து 500-க்கு விற்பனையானது.

**உழவர் சந்தைகளில்**

சேலம் மாவட்டத்தில் மொத்தம் 11 இடங்களில் உழவர் சந்தைகள் செயல்பட்டு வருகின்றன. சந்தைக்கு விவசாயிகள் தாங்கள் உற்பத்தி செய்யும் காய்கறிகளை கொண்டு வந்து விற்பனை செய்கின்றனர். சேலம் மாநகரில் அஸ்தம்பட்டி, தாதகாப்பட்டி, அம்மாப்பேட்டை, சூரமங்கலம் ஆகிய இடங்களில் உழவர் சந்தைகள் உள்ளன.

தமிழ்புத்தாண்டு தினமான நேற்று உழவர் சந்தைகளுக்கு விவசாயிகள் காய்கறிகளை வழக்கத்துக்கு மாறாக அதிகமாக கொண்டு வந்தனர். வாங்குவதற்கு பொதுமக்களின் அதிகம் வந்தததால் உழவர் சந்தைகளில் கூட்டம் அலைமோதியது.

**சூரமங்கலம்....**

சேலம் சூரமங்கலம் உழவர் சந்தைக்கு மொத்தம் 732 விவசாயிகள் 41 ஆயிரம் கிலோ காய்கறிகளை கொண்டு வந்தனர். இதில் ரூ.8 லட்சத்து 80 ஆயிரம் விற்பனையானது. இதில் காய்கறிகளை வாங்க மட்டும் 8 ஆயிரத்து 300 பேர் வந்தனர். இதேபோல், தாதாகாப்பட்டி உழவர் சந்தைக்கு வந்த 230 விவசாயிகள் 38 ஆயிரத்து 400 கிலோ காய்கறிகளை கொண்டு வந்தனர்.

இதில் ரூ.8 லட்சத்து 20 ஆயிரத்துக்கு விற்றது. சந்தைக்கு 7 ஆயிரத்து 680 பேர் வந்தனர். அம்மாப்பேட்டை உழவர் சந்தையில் 78 விவசாயிகள் 16 ஆயிரத்து 800 கிலோ காய்கறி பொருட்களை கொண்டு வந்தனர். அதில் ரூ.3 லட்சத்து 71 ஆயிரத்து 800-க்கு விற்பனையானது. 4 ஆயிரத்து 200 பேர் வாங்கி சென்றனர்.

அஸ்தம்பட்டி உழவர் சந்தையில் 70 விவசாயிகள் 12 ஆயிரம் கிலோ காய்கறிகளை கொண்டு வந்தனர். இதில் ரூ.2 லட்சத்து 68 ஆயிரத்துக்கு விற்பனையானது. நேற்று மட்டும் 2 ஆயிரத்து 400 பேர் உழவர் சந்தைக்கு வந்து காய்கறிகள் மற்றும் பொருட்களை வாங்கி சென்றனர்.

**ரூ.40¾ லட்சத்துக்கு விற்பனை**

இதுகுறித்து சேலம் மாவட்ட வேளாண்மை துணை இயக்குனர் பரணி கூறியதாவது:-

தமிழ் புத்தாண்டை முன்னிட்டு நேற்று சேலம் மாநகரம் மற்றும் மாவட்டத்தில் உள்ள உழவர் சந்தைகளில் காய்கறிகள் வரத்தும் விற்பனையும் அமோகமாக இருந்தது. பொதுமக்களும் அதிகளவு வந்து காய்கறிகளை வாங்கி சென்றனர்.

சேலம் மாவட்டத்தில் உள்ள 11 உழவர் சந்தைகளில் நேற்று ஆயிரத்து 75 விவசாயிகள் 1 லட்சத்து 90 ஆயிரத்து 122 கிலோ காய்கறிகளை விற்பனைக்கு கொண்டு வந்தனர். இதன் மூலம் ரூ.40 லட்சத்து 94 ஆயிரத்து 500-க்கு விற்பனையாகி உள்ளது. உழவர் சந்தைக்கு மொத்தம் 40 ஆயிரத்து 700 பேர் வந்து காய்கறிகளை வாங்கி சென்றனர்.

இவ்வாறு அவர் கூறினார்.

**நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 11 காசுகள் உயர்வு 266 காசுகளாக நிர்ணயம்**



**நாமக்கல்,**

நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை 11 காசுகள் உயர்த்தப்பட்டு, 266 காசுகளாக நிர்ணயம் செய்யப்பட்டு உள்ளது.

**முட்டை விலை உயர்வு**

நாமக்கல் மண்டலத்தில் முட்டை கொள்முதல் விலை கடந்த சில நாட்களாக 255 காசுகளாக நீடித்து வந்தது. இந்த நிலையில் நேற்று நாமக்கல்லில் நடந்த தேசிய முட்டை ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் முட்டை கொள்முதல் விலையை 11 காசுகள் உயர்த்த முடிவு செய்தனர். எனவே முட்டை கொள்முதல் விலை 266 காசுகளாக உயர்ந்து உள்ளது. பிற மண்டலங்களில் முட்டை விலை (காசுகளில்) வருமாறு:– சென்னை–290, ஐதராபாத்–244, விஜயவாடா, தனுகு–245, பார்வாலா–256, மும்பை–280, மைசூர்–282, பெங்களூர்–275, கொல்கத்தா–295, டெல்லி–268.

**காரணம் என்ன?**

கறிக்கோழி கிலோ ரூ.74–க்கு விற்பனை செய்யப்பட்டு வந்தது. இந்த நிலையில் பல்லடத்தில் நடந்த கறிக்கோழி ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கிலோவுக்கு ரூ.1 உயர்த்த முடிவு செய்தனர். எனவே கறிக்கோழி விலை கிலோ ரூ.75 ஆக உயர்ந்து உள்ளது. முட்டைக்கோழி கிலோ ரூ.47–க்கு விற்பனை செய்யப்பட்டு வருகிறது. அதன் விலையில் மாற்றம் செய்யப்படவில்லை.

இன்று(செவ்வாய்க்கிழமை) முதல் மீன்பிடி தடைக்காலம் தொடங்க உள்ளதால், மீன்களின் விலை உயர்ந்து, முட்டை நுகர்வு அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. இதனை கருத்தில் கொண்டு நாமக்கல் மண்டலத்தில் முட்டை விலை உயர்த்தப்பட்டு உள்ளதாக பண்ணையாளர்கள் தெரிவித்தனர்.

**ஆலங்குளம் பனவடலிசத்திரத்தில் பலத்த சூறை காற்று ஆயிரக்கணக்கான வாழைகள் சாய்ந்தன**



**நெல்லை, -**

ஆலங்குளம் மற்றும் பனவடலிசத்திரத்தில் சூறை காற்று வீசியதில் ஆயிரக்கணக்கான வாழைகள் சாய்ந்தன.

வாழைகள் சாய்ந்தன

நெல்லை மாவட்டம் பனவடலிசத்திரம் அருகே உள்ள வன்னிக்கோனேந்தல், அடைக்காலபுரம், தேவர்குளம், சுப்பையாபுரம், மேசியாபுரம், மருக்காலங்குளம் ஆகிய ஊர்களில் நேற்று காலையில் வெயிலின் தாக்கம் அதிகம் இருந்தது. மாலையில் திடீர் என்று பலத்த சூறாவளி காற்று வீசியது.

இதில் தேவர்குளத்தைச் சேர்ந்த ஜெயராஜ் (வயது 40) என்பவர் தோட்டத்தில் 5 ஆயிரம் வாழைகள் சாய்ந்தன. சேதமடைந்த வாழைகளை வன்னிக்கோனேந்தல் வருவாய் ஆய்வாளர் முருகன், தேவர்குளம் கிராம நிர்வாக அதிகாரி மணிகண்டன் நேரில் பார்வையிட்டார்.

<u>ஆலங்குளம்</u>

ஆலங்குளத்தில் நேற்று முன்தினம் பலத்த சூறாவளி காற்றுடன் மழை பெய்தது. இதில் 200–க்கும் மேற்பட்ட வாழைகள் முறிந்தன. ஆலங்குளம் காய்கறி மார்க்கெட் அருகில் அதே ஊரைச் சேர்ந்த வைத்திலிங்கம் என்பவரின் தோட்டத்தில் 100 வாழைகளும், சங்கர் என்பவர் தோட்டத்தில் 100–க்கும் மேற்பட்ட வாழைகளும் சூறாவளி காற்றில் சேதம் அடைந்தன. ஆலங்குளம் பகுதியில் தண்ணீர் இன்றி வறட்சியாக காணப்படுகிறது. இந்த நிலையில் சூறாவளி காற்றில் வாழைகள் சேதமடைந்ததால் விவசாயிகள் மிகுந்த வேதனை அடைந்து உள்ளனர்.